
# ரிவ்கா

அடுத்த தலைமுறைக்கான பாடங்கள்



# ரிவ்கா

அடுத்த தலைமுறைக்கான பாடங்கள்

---

## சிறு குழுக்களுக்கான பன்னிரண்டு வார செயல் திட்டம்

ரிவ்கா என்னும் திரைப்படத்தைப் பயன்படுத்தி, இயேசு கிறிஸ்து யார் என்றும் அவரைப் பின்பற்றுதல் என்றால் என்ன என்றும் மற்றவர்கள் சிறப்பாக புரிந்துகொள்வதற்கு உதவுதல்!

# குழுத்தலைவருக்கான கையேடு

## உங்கள் சமுதாயத்தின் மத்தியில் தேவனுடைய இராஜ்ஜியத்தைக் கட்டியெழுப்புவதற்காக கர்த்தராகிய இயேசு கிறிஸ்து உங்களை அர்த்தமுள்ள வழிகளில் பயன்படுத்துவாராக!

இயேசு கிறிஸ்து யார் என்பதை நீங்கள் முதன்முதலில் அறிந்ததை நினைத்துப்பாருங்கள். அவருடைய மனவுருக்கம், அவருடைய கனிவு, அவருடைய பரிசுத்தம், அவருடைய சாந்தம், அவருடைய அரசுரிமை போன்றவற்றை நீங்கள் கண்டீர்கள். நீங்கள் எதிர்பார்த்த அனைத்தும் அவர் தான். அவரே அனைத்து மக்கள் இனங்களுக்குமான நம்பிக்கை.

வேதாகமத்தில் உள்ள வெளிப்படுத்தின விசேஷம் என்னும் புத்தகத்தில் அப்போஸ்தலனாகிய யோவான் இவ்வாறு எழுதுகிறார்: “இவைகளுக்குப்பின்பு, நான் பார்த்தபோது, இதோ, சகல ஜாதிகளிலும் கோத்திரங்களிலும் ஜனங்களிலும் பாஷைகளிலிருமிருந்து வந்ததும், ஒருவனும் எண்ணக்கூடாததுமான திரளான கூட்டமாகிய ஜனங்கள், வெள்ளை அங்கிகளைத் தரித்து, தங்கள் கைகளில் குருத்தோலைகளைப் பிடித்து, சிங்காசனத்திற்கு முன்பாகவும் ஆட்டுக்குட்டியானவருக்கு முன்பாகவும் நிற்கக்கண்டேன். அவர்கள் மகா சத்தமிட்டு: இரட்சிப்பின் மகிமை சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிற எங்கள் தேவனுக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் உண்டாவதாக என்று ஆர்ப்பரித்தார்கள்.” (வெளி 7:9-10)

இராஜாதி இராஜா யார் என்று உங்களுக்கு நன்றாகத் தெரியும். நீங்கள் மற்றவர்களுடன் சேர்ந்து வளரவும் வேண்டும், அதே நேரத்தில் இயேசு கிறிஸ்துவை மற்றவர்களோடு அவர்கள் பகிர்ந்து கொள்ள நீங்கள் அவர்களை தயார்படுத்தவும் வேண்டும்.

இயேசு, “ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள்; இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார். ஆமென்.“ (மத்தேயு 28:19-20)

இயேசு கிறிஸ்து நம்மிடம், நீங்கள் ஜனங்களிடம் போய் அவர்களை சீஷராக்கி, அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து, அவர்களுக்கு என் உபதேசங்களை கற்றுக்கொடுங்கள் என்று கட்டளையிட்டார். மேலும் அவர் எப்போதும் நம்முடன் இருப்பதாக வாக்களித்தார். நாம் அவருக்கு கீழ்ப்படியவும், அர்ப்பணமுள்ள சீஷர்களை உருவாக்கவும் நமக்கு உதவக்கூடிய ஒரு சிறந்த உத்தியை இந்தப் பாடத்திட்டம் நமக்கு வழங்குகிறது.

ரிவ்கா திரைப்படத் தொடரானது முதல் நூற்றாண்டில் வாழ்ந்த ஒரு சமூகத்தினர் தங்கள் வாழ்வில் சந்தித்த இன்ப துன்பங்களை மிகவும் அழுத்தமாகக் கூறுகிறது. நம் மேல் அன்புள்ள தேவன் நிகழ்காலத்திற்கான பலத்தையும் எதிர்காலத்திற்கான நம்பிக்கையையும் எவ்வாறு நமக்குத் தருகிறார் என்பதை இக்கதை நிரூபிக்கிறது. குடும்ப உறுப்பினர்கள், நண்பர்கள் மற்றும் வேறு சிலரைக் கொண்டுள்ள ஒரு சிறிய குழுவில் பயன்படுத்துவதற்கு ரிவ்கா திரைப்படத் தொடர் ஒரு சிறந்த கருவியாகும். குழுவின் உறுப்பினர்கள் இத்திரைப்படத் தொடரின் ஒவ்வொரு பகுதிகளையும் பார்க்கும் போது, அவர்கள் இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கை, அவர் செய்த அற்புதங்கள், அவருடைய மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் பற்றி மேலும் அறிந்து கொள்ளலாம்.

இயேசு கிறிஸ்து யார் என்பதை அறிந்துகொள்வதாலேயே அநேகர் அவரைப் பின்பற்ற உந்தப்படுவார்கள். மற்றவர்கள் அவரைப் பற்றி மேலும் அறிந்துகொள்ள விரும்புவார்கள். இத்தொடரின் இறுதியில், ஜீசஸ் ஃபிலிம் ப்ராஜெக்ட் உருவாக்கியுள்ள "இயேசுவை நினை!" அல்லது "இயேசுவை அறிந்துகொள்!" போன்ற மற்ற கருவிகளைப் பயன்படுத்தி மேலும் சிறிய குழு விவாதங்களில் பங்குபெறுவதற்கான ஒரு அழைப்பையும் ரிவ்கா தொடர் வழங்குகிறது.

"ரிவ்கா" திரைப்படத் தொடர் பாடத்திட்டத்தைப் பயன்படுத்த நான்கு எளிய படிகள் உள்ளன.

# படி ஒன்று 01

## நீங்கள் யாரைச் சந்திக்க விரும்புகிறீர்கள் என்பதைத் தீர்மானிக்கவும்.

யார் இயேசு கிறிஸ்துவைப் பற்றி அதிகம் தெரிந்துகொள்ள வேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்கள்? உங்கள் அண்டை வீட்டாரோ அல்லது உங்கள் வீட்டிற்கு அருகிலுள்ள கிராமமோ அவரைப் பற்றி அறிந்துகொள்ள வேண்டியது உள்ளதா? உங்கள் கல்லூரி நண்பர்களோ அல்லது உடன் வேலை பார்க்கும் சக பணியாளர்களோ இயேசு கிறிஸ்துவைப் பற்றி இன்னும் தெரிந்துகொள்ள வேண்டியது உள்ளதா?

முதலில், அந்த இடத்தில் இருக்கின்ற "சமாதானத்தின் நபரை" அடையாளம் கண்டுகொள்ளுங்கள். லூக்கா 10:6-ல், இயேசு கிறிஸ்து தம்மைப் பின்பற்றிய சீஷர்களில் மேலும் 70 பேரை நியமித்து, தம்முடைய செய்தியை எடுத்துச் செல்ல அனுப்புகையில், அவர்கள் செல்லும் ஒவ்வொரு இடத்திலும் சமாதானத்தின் நபரைத் தேடும்படி அவர்களுக்கு அறிவுறுத்துகிறார்.

சமாதானத்தின் நபர் என்பவர் கண்டிப்பாக ஒரு விசுவாசியாக இருக்கவேண்டிய அவசியமில்லை. அவர்:

- கிறிஸ்துவையும், அவருடைய போதனையையும் ஏற்றுக்கொள்ளும் திறந்த மனமுடையவர்.
- சமூகத்தில் செல்வாக்கு மிக்கவராகவோ அல்லது மற்றவர்களால் நன்கு அறியப்பட்டவராகவோ இருப்பவர்.
- தன்னுடன் தொடர்பில் உள்ளவர்களை உங்களுக்கு அறிமுகப்படுத்த தயாராக இருப்பவர்.
- ரிவ்கா' என்னும் திரைப்படத்தைப் பார்க்க வருமாறு மற்றவர்களை நீங்கள் அழைக்க உங்களுக்கு உதவ தயாராக இருப்பவர்.

இப்படிப்பட்ட நபருடன் நீங்கள் ஒரு உறவை உருவாக்கிக்கொள்ளும்படி பரிந்துரைக்கிறோம். இவருடன் உங்கள் உறவை வளர்க்க உதவுவதற்கு வழிகாட்டும் கருவியாக இந்த மூன்று-படி செயல்முறையை நீங்கள் பயன்படுத்தலாம்.

**ஜெபம்**
இந்த சமாதானத்தின் நபர் யார் என்பதை தேவன் உங்களுக்குக் காண்பிக்கும்படியாக ஜெபியுங்கள். அந்த நபருடன் நீங்கள் பழக ஆரம்பிக்கும்போது, அவருக்காக நீங்கள் ஜெபிக்கவேண்டியது என்ன என்று அவரிடம் கேளுங்கள்.

**அக்கறை கொள்க**
அவருடையத் தேவைகளைப் புரிந்துகொள்ளத் தொடங்கும் போது, அத்தேவைகளை நீங்கள் சந்திப்பதன் மூலம் நீங்கள் அவர்கள்மேல் அக்கறை கொள்கிறீர்கள் என்பதைக் காட்டுங்கள். நீங்கள் அவருக்கு உண்மையான மற்றும் ஆதரவளிக்கும் தோழியாக இருங்கள்.

**பகிர்ந்துகொள்க**
இயேசு கிறிஸ்துவைப் பற்றி அவருக்கு ஏற்கனவே தெரியாவிட்டால் சந்தர்ப்பம் கிடைக்கும்போது, அவருடன் இயேசுவைப் பற்றி பகிர்ந்து கொள்ளுங்கள்.

# படி இரண்டு **02**

## ரிவ்கா திரைப்படத்தைக் காண்பியுங்கள்.

இந்த செயல்திட்டத்திற்கு, உதாரணமாக நாம் ஒரு பெண்கள் குழுவை பயன்படுத்துவோம், இருப்பினும், இத்திட்டத்தை ஆண்களும் குடும்பங்களும் பயன்படுத்தும்படி ஊக்குவிக்கப்படுகிறார்கள்!

ரிவ்கா திரைப்படம் என்பது 12 குறும்பட பகுதிகளை உடைய ஒரு திரைப்படத் தொடராகும். ரிவ்கா திரைப்படத்தின் முதல் தொடரைப் பார்ப்பதற்கு சில பெண்களை நீங்கள் அழையுங்கள்; ஒருவேளை சமாதானத்தின் நபருடைய வீட்டில் வைத்துக்கூட அத்திரைப்படப் பகுதியை நீங்கள் காட்டலாம். முதலில் உணவளித்துவிட்டோ அல்லது சிற்றுண்டிகள் மற்றும் குடிப்பதற்கு ஏதாவது வழங்கிய பின்போ அத்திரைப்படத் தொடரைக் காண்பிக்கலாம். அக்கூட்டத்தில் கலந்துகொள்ளும் ஒவ்வொரு நபரையும் நன்கு கவனித்துக் கொள்ளுங்கள். உங்கள் விருந்தோம்பலானது எக்குறையுமின்றி மிகச் சிறப்பாக இருக்கட்டும்.

ரிவ்கா திரைப்படத்தை 34 மொழிகளில் ஜீசஸ் ஃபிலிம் ப்ராஜெக்ட்-இன் இணையதளத்திலும், ஜீசஸ் ஃபிலிம் ப்ராஜெக்ட் செயலியிலும் இலவசமாக பெறலாம். அல்லது கையேட்டின் 7-வது பக்கத்தில் உள்ள குழுத்தலைவருக்கான குறிப்பு வழிகாட்டியில் உள்ள QR குறியீடை பயன்படுத்தியும் இதனைப் பெற்றுக்கொள்ளலாம்.

முதல் தொடரின் முடிவில் படத்தை பார்க்க வந்த பெண்களுக்கு இரண்டு அழைப்புகளை கொடுக்கவும்:

1. முதலாவதாக, இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றும்படி அப்பெண்களுக்கு அழைப்பு விடுக்கலாம். அவர்களுடன் உங்கள் சொந்தக் கதையைப் பகிர்ந்துகொள்ளவும், அதை அத்திரைப்படத்தில் அவர்கள் பார்த்த கதைகளுடன் தொடர்புபடுத்தவும் மறவாதிருங்கள்.
2. இரண்டாவதாக, இயேசு கிறிஸ்துவைப் பற்றி மேலும் அறிந்துகொள்வதற்கு மறுநாள் வருமாறு அவர்களை அழைக்கவும்! ஆர்வமுள்ள பிற நண்பர்களையும் அழைத்து வருவதற்கு அவர்களை ஊக்கப்படுத்துங்கள்.

அதற்குபின், அக்கூட்டங்களில் கலந்துகொண்ட பெண்களைப் பற்றி தெரிந்துகொள்வதற்கு நேரத்தை செலவிடுங்கள். திரைப்படத்தில் அவர்கள் பார்த்த கதைகள் மற்றும் கருப்பொருள்கள் வலிமிகுந்த அவர்களுடைய சொந்த கதைகளை வெளிக்கொண்டு வரலாம். தேவைப்பட்டால் நீங்கள் அவர்களுக்காக தனித்தனியாக அவர்களுடன் ஜெபிக்கலாம்.

மிகச் சிறந்த பகுதி இப்போது வருகிறது!

# படி மூன்று 03

## உங்கள் புதிய ரிவ்கா பெண்கள் குழுவை தொடங்குங்கள்

இயேசு கிறிஸ்துவை அறிந்து கொள்வதிலும், உங்கள் சிறு குழுவில் இணைந்து கற்றுக்கொள்வதிலும் ஆர்வம் காட்டும் ஒவ்வொரு பெண்களுக்காகவும் ஜெபம் செய்யுங்கள். ஒவ்வொரு பெண்ணினுடைய கடின இருதயமும் பரிசுத்த ஆவியானவரால் மென்மையாக்கப்பட்டு கர்த்தரிடத்தில் திருப்பப்படும்படியாக ஜெபியுங்கள். இயேசு கிறிஸ்துவைப் பற்றி கூறப்பட்டுள்ள இத்திரைப்படத்தின் ஒவ்வொரு கதையும் குறிப்பிடத்தக்க மற்றும் அர்த்தமுள்ள வகைகளில் அவர்களைப் பாதிக்கவும், அவர்கள் தனிப்பட்ட முறையில் அக்கதைகளுடன் தங்களை இணைத்துக்கொள்ளவும் அவர்களுக்காக ஜெபியுங்கள்.

ரிவ்கா திரைப்படத்தின் 12 குறும்படப் பகுதிகளின் தலைப்புகள்:

1. குடும்பத்தில்
2. கைவேலைப்பாடு
3. அனுதின உணவு
4. கடினமான தருணங்கள்
5. காற்றும் கிணறுகளும்
6. சமாதானத்தைக் கண்டுகொள்ளுதல்
7. நண்பர்களும் எதிரிகளும்
8. விளக்கை சுத்தம் செய்தல்
9. திருமண நாள்
10. பாதியில் விடப்பட்ட தையல்
11. பிறப்புகள்
12. சுவிசேஷத்தை அறிவித்தல்

நீங்கள் ஆரம்பித்திருக்கும் புதிய குழுவானது, வரவிருக்கும் வாரங்களில், இயேசு கிறிஸ்துவைப் பற்றியும், "அவரைப் பின்பற்றுதல்" என்பதன் அர்த்தம் என்ன என்பதையும் புரிந்துகொள்வதில் வளருவார்கள். மேலும் தங்களுடைய வாழ்க்கையை கிறிஸ்தவ சமுதாயத்தில் அனுபவிப்பதற்கான ஒரு வாய்ப்பையும் அவர்கள் பெறுவார்கள்.

குழுவின் நோக்கம் மற்றும் வளர்ச்சி ஆகியவற்றை உறுதி செய்யவும், குழுவினரை ஊக்கப்படுத்தவும், குழுவில் உள்ள பெண்களுக்குள்ளே வலுவான நட்பை வளர்ப்பதற்காகவும், குழுவின் ஒவ்வொரு சந்திப்பிலும் மூன்றில்-மூன்று (3/3) என்னும் பாடவடிவமைப்பைப் பயன்படுத்தப் போகிறோம். இந்த வடிவமைப்பானது மூன்று பகுதிகளைக் கொண்டுள்ளது: பின்னோக்கிப் பார்த்தல், மேல்நோக்கிப் பார்த்தல் மற்றும் முன்னோக்கிப் பார்த்தல்.

குறிப்பு – ரிவ்கா பாடத்திட்டமானது, தேவனின் அழைப்பை நிறைவேற்ற உங்களுக்கு உதவும் ஒரு முன்வடிவமைப்பாக (Template) வடிவமைக்கப்பட்டுள்ளது. **இதனை உங்கள் கலாச்சார தேவைகளுக்கு ஏற்றவாறு மாற்றியமைத்துக்கொள்ள தயங்க வேண்டாம்!**

# மூன்றில் மூன்று

## சீஷத்துவ பயிற்சியின் ஒரு செயல் முறை



பின்னோக்கிப் பார்த்தல்

**அக்கறை கொள்:** நீங்கள் எப்படி இருக்கிறீர்கள் என்பதைப் பகிர்ந்து கொள்ளுங்கள்.

**ஆராதனை செய்:** பாடல் மற்றும் தேவன் உங்களுக்கு செய்த நன்மைகளை பகிர்ந்துகொள்ளுதல் மூலம் தேவனை ஆராதியுங்கள்.

**விசுவாசத்தைக் கொண்டாடு:** நீங்கள் கடவுளைக் குறித்து கற்றுக்கொள்வதை எவ்வாறு வாழ்வில் நடைமுறைப்படுத்தி ஆவிக்குரிய வெற்றி கண்டீர்கள் என்பதை ஒருவரோடு ஒருவர் பகிர்ந்துகொள்ளுங்கள்.

**தரிசனத்தைப் பகிர்ந்து கொள்:** இயேசு கிறிஸ்துவை உறுதியாகப் பின்பற்ற ஒருவரை ஒருவர் உற்சாகப்படுத்துங்கள். இயேசு கிறிஸ்துவில் ஒரு நபரின் வாழ்க்கை எவ்வாறு மாற முடியும் என்பதையும், அவர்கள் மூலம் தேவன் இந்த உலகத்தில் எவ்வாறு செயல்பட முடியும் என்பதையும் பகிர்ந்துகொள்ளுங்கள்



மேல் நோக்கிப் பார்த்தல்

**படத்தைக் காட்டு:** திரைப்படப் பகுதியைப் பார்க்கவும்

**சொல்க:** பார்த்த திரைப்படப் பகுதியின் கதையை யாராவது ஒருவர் தன் சொந்த வார்த்தைகளில் சொல்லும்படி கேளுங்கள்.

**பூர்த்தி செய்க:** விடுபட்ட பகுதிகளை சொல்லும்படி குழுவில் உள்ள மற்றவர்களை உற்சாகப்படுத்தவும்.

**கலந்துரையாடு:** ஒவ்வொரு பாடத்திலும் கொடுக்கப்பட்டுள்ள கேள்விகளைக் கேட்கவும்.



முன்னோக்கிப் பார்த்தல்

**நடைமுறைப்படுத்து:** கடவுளாகிய இயேசு கிறிஸ்துவைக் குறித்து இன்று நீங்கள் கற்றுக்கொண்டதை உங்கள் வாழ்வில் எப்படிப் பின்பற்றலாம் அல்லது செயலில் காட்டலாம்? உங்கள் பதிலைப் பகிர்ந்துகொள்ளுங்கள்.

**பயிற்சி செய்து பழகு:** திரைப்படத்தின் கதை, அதன் மூலம் நீங்கள் கற்றுக்கொண்டவை மற்றும் அதை எப்படி உங்கள் வாழ்வில் கடைபிடிக்கப் போகிறீர்கள் என்பதை ஒரு கதையைப் போல மற்றவர்களுக்கு சொல்லுவீர்கள் என்றால் எப்படி சொல்வீர்கள்? இப்பொழுதே உங்கள் குழுவில் உள்ள ஒரு பெண்ணிடம் சொல்லிப் பார்த்து பயிற்சி எடுங்கள்.

**பகிர்ந்துகொள்:** நீங்கள் பயிற்சி எடுத்த கதையை வரும் வாரத்தில் மற்றவர்களுடன் (வீட்டில், கல்லூரியில், வேலை பார்க்கும் இடத்தில்) பகிர்ந்து கொள்ளுங்கள். சரியான சமயம் வரும்போது அவர்களை இந்த குழுவில் கலந்து கொள்ள வரும்படி அழைக்கவும்.

**ஜெபி:** நாம் கற்றுக்கொண்டவற்றிற்காக தேவனுக்கு நன்றி செலுத்துங்கள். குழுவில் உள்ளவர்கள் ஒருவருக்காக ஒருவர் ஜெபியுங்கள். மேலும் நம் சமூகத்தில் நம்மைச் சுற்றி இருக்கும் மற்றவர்களுக்காகவும் ஜெபம் செய்யுங்கள்.

# படி நான்கு

# 04

## அடுத்த படியை எடுத்து வை!

இந்த பாடத்திட்டத்தின் கடைசி பாடம் சுவிசேஷத்தைப் பகிர்ந்துகொள்ளுவதைப் பற்றி விவாதிக்கிறது.

உங்கள் குழுவில் உள்ள நபர்களை அடுத்த கட்டத்தை நோக்கி வழிநடத்துவது முக்கியமானதாகும். **உங்கள் குழு உறுப்பினர்களில் சிலரை ஒரு புதிய குழுவைத் தொடங்குவதற்கும், திட்டத்தை நடத்துவதற்கும் அவர்களை ஊக்கப்படுத்துவதற்கும் இது ஒரு சிறந்த வாய்ப்பாக இருக்கலாம்.**

உங்கள் குழு தொடர்ந்து ஒன்றாகச் சந்திக்க விரும்பினால், "இயேசுவை நினை!" அல்லது "இயேசுவை அறிந்துகொள்!" போன்ற புதிய குழு ஆய்வுக்கு அவர்கள் மாறிக்கொள்ளுமாறு பரிந்துரைக்கிறோம். இந்த இரண்டு ஆய்வுகளைப் பற்றிய கூடுதல் தகவல்களை கீழே காணலாம்:

"இயேசுவை நினை!" பாடத்திட்டத்தைப் பற்றிய தகவல் பக்கம்:
www.jesusfilm.org/consider-jesus/

"இயேசுவை அறிந்துகொள்!" பாடத்திட்டத்தைப் பற்றிய தகவல் பக்கம்:
www.jesusfilm.org/partners/resources/strategies/knowing-jesus/

"இயேசுவை அறிந்துகொள்!" பாடத்திட்டத்திற்கான விளம்பர காணொளி:
www.youtube.com/watch?v=MkYpNK5OvKk

இயேசுவை நினை

இயேசுவை அறிந்துகொள்

இயேசுவை அறிந்துகொள் விளம்பரம்

# குழுத்தலைவருக்கான குறிப்பு வழிகாட்டி

**திரைப்பட பகுதிகளை கலந்தாலோசிக்கும் சிறு குழு ஆய்வுகளாக எப்படி எடுத்து செல்வது?**

ரிவ்கா திரைப்படமானது 12 குறும்படப் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒரு நேரத்தில் ஒரு குறும்பட பகுதியை பார்த்து, குழுவாக ரிவ்கா பாடத்திட்டத்தின் ஒரு அத்தியாயத்தை மட்டும் கலந்தாலோசிப்பதே குழு ஆய்வுக்கு சிறந்த வழி ஆகும்.

ஒவ்வொரு வாரமும் அனைத்து கேள்விகளுக்கான விடைகளையும் காண வேண்டிய அவசியமில்லை. இயேசு கிறிஸ்து யார் என்றும், ரிவ்காவின் வாழ்வில் ஏற்பட்ட மாற்றம் என்ன என்றும் அத்திரைப்படப் பகுதி வெளிப்படுத்துகிறதை உங்கள் குழு உறுப்பினர்கள் சுதந்திரமாக விவாதிக்க அனுமதிப்பதே மிக முக்கியமான செயலாகும். ஒரு ஒருங்கிணைப்பாளராக உங்கள் குழுவினருக்கு ஒரு பாதுகாப்பான சூழலை உருவாக்குவது உங்கள் பொறுப்பாகும். உங்கள் பணி என்னவென்றால் உறுப்பினர்கள் கூறுவதைக் கேட்பதும், அவர்களை வழிநடத்துவதுமே - பிரசங்கம் செய்வதல்ல.

இந்தக் குறும்படப் பகுதிகளைக் பார்ப்பதற்கு, நீங்கள் ஜீசஸ் ஃபிலிம் இணையதளத்திற்கோ அல்லது ஜீசஸ் ஃபிலிம் ப்ராஜெக்ட் செயலிக்கோ சென்று, குறும்படப் பகுதியின் தலைப்பைக்கொண்டு தெரிவு செய்யலாம். குறும்படப் பகுதிகள் அனைத்தையும் QR குறியீடைப் பயன்படுத்தியும் கண்டுபிடிக்கலாம்.

**கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் ராஜ்யத்தை விரிவுபடுத்த தேவன் உங்களைப் பயன்படுத்துவார் என்று நீங்கள் அவரை நம்பும்போது, தேவன் உங்களை ஆசீர்வதிப்பார் என்று நாங்கள் நம்புகிறோம் மற்றும் உங்களுக்காக ஜெபிக்கிறோம்!**

ரிவ்கா
குறும்படப் பகுதிகள்

# பாடம் 1: குடும்பத்தில்

இந்த குறும்படப்பகுதி நாம் தேவனை அணுகுவதைப் பற்றி கவனம் செலுத்துகிறது.

பின்னோக்கிப் பார்த்தல்

**அக்கறை கொள்:** நீங்கள் எப்படி இருக்கிறீர்கள் என்பதைப் பகிர்ந்து கொள்ளுங்கள். கொடுப்பதற்கு உதாரத்துவமாய் இருங்கள்.

**ஆராதனை செய்:** பாடல் மற்றும் தேவன் உங்களுக்கு செய்த நன்மைகளை பகிர்ந்துகொள்ளுதல் மூலம் தேவனை ஆராதியுங்கள்.

**விசுவாசத்தைக் கொண்டாடு:** நீங்கள் கற்றுக்கொண்டதை வாழ்வில் எப்படிப் பயன்படுத்துகிறீர்கள் என்பதைப் பகிர்ந்து கொள்ளுங்கள்.

**தரிசனத்தைப் பகிர்ந்து கொள்:** கிறிஸ்துவுக்குள் நீங்கள் என்னவாக முடியும் என்றும் உங்கள் மூலம் தேவன் இந்த உலகத்தில் என்ன செய்ய முடியும் என்பதையும் பகிர்ந்து கொள்ளுங்கள்.

---

"அதற்கு இயேசு: நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்" என்றார். (யோவான் 14:6)

மேல் நோக்கிப் பார்த்தல்

**படத்தைக் காட்டு:** திரைப்படப் பகுதியைப் பார்க்கவும்.

**சொல்க :** பார்த்த திரைப்படப் பகுதியின் கதையை யாராவது ஒருவர் தன் சொந்த வார்த்தைகளில் சொல்லும்படி கேளுங்கள்.

**பூர்த்தி செய்க:** விடுபட்ட பகுதிகளை சொல்லும்படி குழுவில் உள்ள மற்றவர்களை உற்சாகப்படுத்தவும்.

**கலந்துரையாடு:** ஒவ்வொரு பாடத்திலும் கொடுக்கப்பட்டுள்ள கேள்விகளைக் கேட்கவும்.

1. எந்த கதாபாத்திரத்துடன் நீங்கள் உங்களை ஒப்பிடுவீர்கள்? ஏன்?
2. மரியம் ஜெபம் செய்யும்போது, கடவுள் தன்னுடைய ஜெபத்தைக் கேட்பதாக அவள் உணரவில்லை. இதைப் போல நீங்கள் எப்பொழுதாவது உணர்ந்திருக்கிறீர்களா? நீங்கள் அப்படி உணர்ந்த ஒரு நேரத்தைப் பற்றி பகிர்ந்துகொள்ளவும்.
3. கடவுள் நம்மை ஏற்றுக்கொள்வதற்கும், அவர் நம்முடைய ஜெபங்களைக் கேட்பதற்கும் நாம் என்ன செய்ய வேண்டும்?
   அ. யாக்கோபு 2:10-ஐ வாசிக்கவும். கடவுளுடைய கட்டளைகளில் பெரும்பாலாவற்றிக்குக் கீழ்ப்படிந்தும் ஒன்றை மட்டும் மீறும் ஒரு நபர் கடவுளுடனான உறவில் சரியாக இருக்க முடியுமா?

   ஆ. யோவான் 14:6-ஐ வாசிக்கவும். கடவுளிடம் செல்வதற்கான வழி எது?
4. உங்களில் சிலருக்கு இயேசு கிறிஸ்துவுடன் தனிப்பட்ட உறவு இருக்கிறது. ஆனால் இன்னும் சிலருக்கு அந்த உறவு இன்னும் உருவாகவில்லை. நாம் கடவுளாகிய இயேசு கிறிஸ்துவை எப்படி தனிப்பட்ட முறையில் அறிந்து கொள்வது என்பதைப் பார்ப்போம். ("ஆவிக்குரிய நான்கு விதிகளைப்பற்றி நீர் கேள்விப்பட்டிருக்கிறீரா?" என்ற சிறிய புத்தகத்தை ஒவ்வொருவருக்கும் கொடுக்கவும் அல்லது GodTools Appஐ பயன்படுத்தி நற்செய்தியைப் பகிரவும். இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள விரும்புபவர்களை உங்களுடன் சேர்ந்து ஜெபிப்பதற்கு அழைக்கவும்.)

முன்னோக்கிப் பார்த்தல்

**நடைமுறைப்படுத்து:** இன்று நீங்கள் கற்றுக்கொண்ட விஷயங்களையும், அதை வாழ்வில் எப்படிப் பின்பற்றலாம்  என்பதையும் பகிர்ந்து கொள்ளுங்கள்.

**பயிற்சி செய்து பழகு :** நீங்கள் இன்று கற்ற விஷயங்களை ஒரு கதையைப் போல ஒருவருக்கொருவர் சொல்லுங்கள்.

**பகிர்ந்துகொள்:** இந்த கதையை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள். சரியான சமயம் வரும்போது அவர்களை இந்த குழுவில் கலந்து கொள்ளும்படி அழைக்கவும்.

**ஜெபி:** நாம் கற்றுக்கொண்டவைகளுக்காகவும்,  குழுவில் உள்ளவர்களுக்காகவும், மேலும் நம் சமூகத்தில் நம்மைச் சுற்றி இருக்கும்  மற்றவர்களுக்காகவும் ஜெபம் செய்யுங்கள்.

# பாடம் 2: கைவேலைப்பாடு

இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றுகிற அனைவரும் தேவனுடைய குடும்பத்தினர் என்பதை இக்குறும்படப் பகுதி கற்றுக்கொடுக்கிறது.

**அக்கறை கொள்:** நீங்கள் எப்படி இருக்கிறீர்கள் என்பதைப் பகிர்ந்து கொள்ளுங்கள். கொடுப்பதற்கு உதாரத்துவமாய் இருங்கள்.

**ஆராதனை செய்:** பாடல் மற்றும் தேவன் உங்களுக்கு செய்த நன்மைகளை பகிர்ந்துகொள்ளுதல் மூலம் தேவனை ஆராதியுங்கள்.

**விசுவாசத்தைக் கொண்டாடு:** நீங்கள் கற்றுக்கொண்டதை வாழ்வில் எப்படிப் பயன்படுத்துகிறீர்கள் என்பதைப் பகிர்ந்து கொள்ளுங்கள்.

பின்னோக்கிப் பார்த்தல்

**தரிசனத்தைப் பகிர்ந்து கொள்:** கிறிஸ்துவுக்குள் நீங்கள் என்னவாக முடியும் என்றும் உங்கள் மூலம் தேவன் இந்த உலகத்தில் என்ன செய்ய முடியும் என்பதையும் பகிர்ந்து கொள்ளுங்கள்.

---

"அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங்கொடுத்தார்." (யோவான் 1:12)

**படத்தைக் காட்டு:** திரைப்படப் பகுதியைப் பார்க்கவும்.

**சொல்க :** பார்த்த திரைப்படப் பகுதியின் கதையை யாராவது ஒருவர் தன் சொந்த வார்த்தைகளில் சொல்லும்படி கேளுங்கள்.

**பூர்த்தி செய்க:** விடுபட்ட பகுதிகளை சொல்லும்படி குழுவில் உள்ள மற்றவர்களை உற்சாகப்படுத்தவும்.

**கலந்துரையாடு:** ஒவ்வொரு பாடத்திலும் கொடுக்கப்பட்டுள்ள கேள்விகளைக் கேட்கவும்.

மேல் நோக்கிப் பார்த்தல்

1. ஆட்டு ரோமத்தைச் சுத்தப்படுத்திக் கொண்டிருந்த பெண்களின் செயலை ஒரு உவமையாகப் பயன்படுத்தி தேவன் அவர்களுடைய வாழ்வில் செயல்படும் விதத்தை ரிவ்கா விளக்கினாள். அழுக்கான ஆட்டு ரோமத்தை சாராவால் செய்து முடிக்கப்படும் கம்பள விரிப்புடன் ஒப்பிட்டு ரிவ்கா என்ன கூற முயற்சித்தாள்?

2. எபேசியர் 2:8-10 வரை உள்ள வசனங்களை வாசிக்கவும். நம் ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் தேவனுடைய செயல்பாட்டைப் பற்றி இப்பகுதி என்ன கூறுகிறது?

3. யோவான் 1:12-13 -ஐ வாசிக்கவும்.

   அ. ஒருவர் எவ்வாறு தேவனுடைய பிள்ளை ஆகிறார்?

   ஆ. இருவர் தேவனுடைய பிள்ளைகளாய் இருந்தால், தேவனுடைய குடும்பத்தில், அவர்கள் இருவருக்குமிடையே உள்ள உறவு என்ன?

4. தேவனுடைய பிள்ளைகளாக, நாம் நம்முடைய எல்லா அக்கறைகளையும், பயங்களையும் சந்தோஷங்களையும் அவரிடம் சொல்லலாம். இதை நாம் செய்வதற்கான ஒரு வழி ஜெபம், அதாவது நாம் தேவனுடன் பேசுவதாகும். நீங்கள் இதற்கு முன்பு தேவனிடம் சொல்ல வேண்டும் அல்லது கேட்க வேண்டும் என்று தோன்றாத ஒன்றை இன்று தேவனிடம் கூற அல்லது கேட்க விரும்புகிறீர்களா?

முன்னோக்கிப்
பார்த்தல்

**நடைமுறைப்படுத்து:** இன்று நீங்கள் கற்றுக்கொண்ட விஷயங்களையும், அதை வாழ்வில் எப்படிப் பின்பற்றலாம் என்பதையும் பகிர்ந்து கொள்ளுங்கள்.

**பயிற்சி செய்து பழகு :** நீங்கள் இன்று கற்ற விஷயங்களை ஒரு கதையைப் போல ஒருவருக்கொருவர் சொல்லுங்கள்.

**பகிர்ந்துகொள்:** இந்த கதையை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள். சரியான சமயம் வரும்போது அவர்களை இந்த குழுவில் கலந்து கொள்ளும்படி அழைக்கவும்.

**ஜெபி:** நாம் கற்றுக்கொண்டவைகளுக்காகவும், குழுவில் உள்ளவர்களுக்காகவும், மேலும் நம் சமூகத்தில் நம்மைச் சுற்றி இருக்கும் மற்றவர்களுக்காகவும் ஜெபம் செய்யுங்கள்.

# பாடம் 3. அனுதின உணவு

இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றுகிற அனைவரும் தேவனுடைய குடும்பத்தினர் என்பதை இக்குறும்படப் பகுதி கற்றுக்கொடுக்கிறது.

பின்னோக்கிப் பார்த்தல்

**அக்கறை கொள்:** நீங்கள் எப்படி இருக்கிறீர்கள் என்பதைப் பகிர்ந்து கொள்ளுங்கள். கொடுப்பதற்கு உதாரத்துவமாய் இருங்கள்.

**ஆராதனை செய்:** பாடல் மற்றும் தேவன் உங்களுக்கு செய்த நன்மைகளை பகிர்ந்துகொள்ளுதல் மூலம் தேவனை ஆராதியுங்கள்.

**விசுவாசத்தைக் கொண்டாடு:** நீங்கள் கற்றுக்கொண்டதை வாழ்வில் எப்படிப் பயன்படுத்துகிறீர்கள் என்பதைப் பகிர்ந்து கொள்ளுங்கள்.

**தரிசனத்தைப் பகிர்ந்து கொள்:** கிறிஸ்துவுக்குள் நீங்கள் என்னவாக முடியும் என்றும் உங்கள் மூலம் தேவன் இந்த உலகத்தில் என்ன செய்ய முடியும் என்பதையும் பகிர்ந்து கொள்ளுங்கள்.

---

"வேதத்திலுள்ள எந்தத் தீர்க்கதரிசனமும் சுயதோற்றமான பொருளையுடையதாயிராதென்று நீங்கள் முந்தி அறியவேண்டியது. தீர்க்கதரிசனமானது ஒருகாலத்திலும் மனுஷருடைய சித்தத்தினாலே உண்டாகவில்லை; தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுப் பேசினார்கள்." (2 பேதுரு 1:20-21)

மேல் நோக்கிப் பார்த்தல்

**படத்தைக் காட்டு:** திரைப்படப் பகுதியைப் பார்க்கவும்.

**சொல்க :** பார்த்த திரைப்படப் பகுதியின் கதையை யாராவது ஒருவர் தன் சொந்த வார்த்தைகளில் சொல்லும்படி கேளுங்கள்.

**பூர்த்தி செய்க:** விடுபட்ட பகுதிகளை சொல்லும்படி குழுவில் உள்ள மற்றவர்களை உற்சாகப்படுத்தவும்.

**கலந்துரையாடு:** ஒவ்வொரு பாடத்திலும் கொடுக்கப்பட்டுள்ள கேள்விகளைக் கேட்கவும்.

1. மரியம் இயேசுவை ஏற்றுக் கொண்டு, அவரைப் பின்பற்றுகிறவளாக இருந்தாலும் அவளுக்கு இன்னும் சந்தேகங்கள் இருந்தன. நமக்கு சந்தேகங்கள் ஏற்படும்போது நாம் என்ன செய்ய வேண்டும்?

2. "அவரது வார்த்தைகள் உண்மையானவை என்பதை நான் எப்படி அறிவேன்?" என்ற மரியத்தின் கேளவிக்கு லைலா எவ்வாறு பதிலளித்தார்?

3. இயேசு கிறிஸ்துவின் வாழ்வில் நிறைவேறிய தீர்க்கதரிசனங்கள் (பழைய ஏற்பாடு / புதிய ஏற்பாடு)

   அ. கன்னியினிடத்தில் பிறந்தவர் (ஏசாயா 7:14 / லூக்கா 1:26-38)

   ஆ. பெத்லகேமில் பிறந்தார் (மீகா 5:2 / லூக்கா 2:1-7)

   இ. சிறுமைப்படுத்தப்பட்டார். நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டார் (ஏசாயா 53:4,5 / யோவான் 19:16-30)

4. வேதாகமத்தில் உள்ள சத்தியங்களை நாம் முழுமையாக நம்பலாமா?

அ. 2 தீமோத்தேயு 3:16ஐ வாசியுங்கள். வேதாகமத்தைப் பற்றி இந்த வசனம் நமக்கு கூறுவது என்ன?

ஆ. 2 பேதுரு 1:20-21ஐ வாசியுங்கள். இந்த வசனங்களின்படி தீர்க்கதரிசனங்கள் எங்கிருந்து வருகிறது?

5. உங்களுக்கு சந்தேகங்கள் ஏற்படும்போது, நீதிமொழிகள் 3:5-6 வசனங்களை நினைவில் கொள்ளுங்கள்.

---

முன்னோக்கிப் பார்த்தல்

**நடைமுறைப்படுத்து:** இன்று நீங்கள் கற்றுக்கொண்ட விஷயங்களையும், அதை வாழ்வில் எப்படிப் பின்பற்றலாம் என்பதையும் பகிர்ந்து கொள்ளுங்கள்.

**பயிற்சி செய்து பழகு :** நீங்கள் இன்று கற்ற விஷயங்களை ஒரு கதையைப் போல ஒருவருக்கொருவர் சொல்லுங்கள்.

**பகிர்ந்துகொள்:** இந்த கதையை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள். சரியான சமயம் வரும்போது அவர்களை இந்த குழுவில் கலந்து கொள்ளும்படி அழைக்கவும்.

**ஜெபி:** நாம் கற்றுக்கொண்டவைகளுக்காகவும், குழுவில் உள்ளவர்களுக்காகவும், மேலும் நம் சமூகத்தில் நம்மைச் சுற்றி இருக்கும் மற்றவர்களுக்காகவும் ஜெபம் செய்யுங்கள்.

# பாடம் 4. கடினமான தருணங்கள்

மிகவும் கடினமான சூழ்நிலைகளிலும் நமக்கு உதவும்படி நாம் தேவனை நம்பலாம் என்பதை இக்குறும்படப் பகுதி நமக்குக் கற்பிக்கிறது.

பின்னோக்கிப் பார்த்தல்

**அக்கறை கொள்:** நீங்கள் எப்படி இருக்கிறீர்கள் என்பதைப் பகிர்ந்து கொள்ளுங்கள். கொடுப்பதற்கு உதாரத்துவமாய் இருங்கள்.

**ஆராதனை செய்:** பாடல் மற்றும் தேவன் உங்களுக்கு செய்த நன்மைகளை பகிர்ந்துகொள்ளுதல் மூலம் தேவனை ஆராதியுங்கள்.

**விசுவாசத்தைக் கொண்டாடு:** நீங்கள் கற்றுக்கொண்டதை வாழ்வில் எப்படிப் பயன்படுத்துகிறீர்கள் என்பதைப் பகிர்ந்து கொள்ளுங்கள்.

**தரிசனத்தைப் பகிர்ந்து கொள்:** கிறிஸ்துவுக்குள் நீங்கள் என்னவாக முடியும் என்றும் உங்கள் மூலம் தேவன் இந்த உலகத்தில் என்ன செய்ய முடியும் என்பதையும் பகிர்ந்து கொள்ளுங்கள்.

---

“தேவன் நமக்கு அடைக்கலமும் பெலனும், ஆபத்துக்காலத்தில் அநுகூலமுமான துணையுமானவர். ஆகையால் பூமி நிலைமாறினாலும், மலைகள் நடுச்சமுத்திரத்தில் சாய்ந்துபோனாலும், அதின் ஜலங்கள் கொந்தளித்துப் பொங்கி, அதின் பெருக்கினால் பர்வதங்கள் அதிர்ந்தாலும், நாம் பயப்படோம்.“ (சங்கீதம் 46:1-3)

மேல் நோக்கிப் பார்த்தல்

**படத்தைக் காட்டு:** திரைப்படப் பகுதியைப் பார்க்கவும்.

**சொல்க :** பார்த்த திரைப்படப் பகுதியின் கதையை யாராவது ஒருவர் தன் சொந்த வார்த்தைகளில் சொல்லும்படி கேளுங்கள்.

**பூர்த்தி செய்க:** விடுபட்ட பகுதிகளை சொல்லும்படி குழுவில் உள்ள மற்றவர்களை உற்சாகப்படுத்தவும்.

**கலந்துரையாடு:** ஒவ்வொரு பாடத்திலும் கொடுக்கப்பட்டுள்ள கேள்விகளைக் கேட்கவும்.

1. அயூபை கொள்ளையர்கள் தாக்கியதற்கான காரணங்கள் என்ன என்று அந்த ஊர் ஜனங்கள் கூறினார்கள்?
2. சாரா, லைலா மற்றும் அயூப் இதற்கு எவ்வாறு பதிலளித்தனர்?
3. சங்கீதம் 46:1-3, 34:17-19, 40:1-2 -ஐ வாசிக்கவும்.

   அ. தாவீதும், பழங்கால எழுத்தாளர்களும் தங்கள் பிரச்சனைகளை எவ்வாறு எதிர்கொண்டார்கள்?

   ஆ. தேவனைப் பற்றி இந்த வசனங்களிலிருந்து நீங்கள் என்ன கற்றுக்கொள்கிறீர்கள்?

   இ. துன்பங்கள், பிரச்சனைகள் வரும்போது நாம் அவற்றை எதிர்கொள்வதற்கான சில வழிகள் எவை?

முன்னோக்கிப் பார்த்தல்

**நடைமுறைப்படுத்து:** இன்று நீங்கள் கற்றுக்கொண்ட விஷயங்களையும், அதை வாழ்வில் எப்படிப் பின்பற்றலாம்  என்பதையும் பகிர்ந்து கொள்ளுங்கள்.

**பயிற்சி செய்து பழகு :** நீங்கள் இன்று கற்ற விஷயங்களை ஒரு கதையைப் போல ஒருவருக்கொருவர் சொல்லுங்கள்.

**பகிர்ந்துகொள்:** இந்த கதையை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள். சரியான சமயம் வரும்போது அவர்களை இந்த குழுவில் கலந்து கொள்ளும்படி அழைக்கவும்.

**ஜெபி:** நாம் கற்றுக்கொண்டவைகளுக்காகவும்,  குழுவில் உள்ளவர்களுக்காகவும், மேலும் நம் சமூகத்தில் நம்மைச் சுற்றி இருக்கும்  மற்றவர்களுக்காகவும் ஜெபம் செய்யுங்கள்.

# பாடம் 5. காற்றும் கிணறுகளும்

நாம் எவ்வாறு பரிசுத்த ஆவியானவரின் வல்லமையில் வாழ்வது என்பதை இந்தக் குறும்படப் பகுதி நமக்கு கற்பிக்கிறது.

பின்னோக்கிப் பார்த்தல்

**அக்கறை கொள்:** நீங்கள் எப்படி இருக்கிறீர்கள் என்பதைப் பகிர்ந்து கொள்ளுங்கள். கொடுப்பதற்கு உதாரத்துவமாய் இருங்கள்.

**ஆராதனை செய்:** பாடல் மற்றும் தேவன் உங்களுக்கு செய்த நன்மைகளை பகிர்ந்துகொள்ளுதல் மூலம் தேவனை ஆராதியுங்கள்.

**விசுவாசத்தைக் கொண்டாடு:** நீங்கள் கற்றுக்கொண்டதை வாழ்வில் எப்படிப் பயன்படுத்துகிறீர்கள் என்பதைப் பகிர்ந்து கொள்ளுங்கள்.

**தரிசனத்தைப் பகிர்ந்து கொள்:** கிறிஸ்துவுக்குள் நீங்கள் என்னவாக முடியும் என்றும் உங்கள் மூலம் தேவன் இந்த உலகத்தில் என்ன செய்ய முடியும் என்பதையும் பகிர்ந்து கொள்ளுங்கள்.

---

“துன்மார்க்கத்திற்கு ஏதுவான மதுபான வெறிகொள்ளாமல்….ஆவியினால் நிறைந்து...“
(எபேசியர் 5:18)

மேல் நோக்கிப் பார்த்தல்

**படத்தைக் காட்டு:** திரைப்படப் பகுதியைப் பார்க்கவும்.

**சொல்க :** பார்த்த திரைப்படப் பகுதியின் கதையை யாராவது ஒருவர் தன் சொந்த வார்த்தைகளில் சொல்லும்படி கேளுங்கள்.

**பூர்த்தி செய்க:** விடுபட்ட பகுதிகளை சொல்லும்படி குழுவில் உள்ள மற்றவர்களை உற்சாகப்படுத்தவும்.

**கலந்துரையாடு:** ஒவ்வொரு பாடத்திலும் கொடுக்கப்பட்டுள்ள கேள்விகளைக் கேட்கவும்.

1. பரிசுத்த ஆவியானவர் எப்படி காற்றைப் போல் இருக்கிறார்?

2. நம்முடைய பழைய சுபாவம் எவ்வாறு அழுக்குத் தண்ணீர் கிணற்றைப் போல் இருக்கிறது? நமது புதிய சுபாவம் எவ்வாறு நல்ல தண்ணீர் கிணற்றைப் போல் இருக்கிறது?

3. **"ஆவிக்குரிய சுவாசம்"** என்னும் பயிற்சியானது பரிசுத்த ஆவியானவரை ஒவ்வொரு நொடிப்பொழுதும் நீங்கள் சார்ந்திருப்பதற்கு உங்களுக்கு உதவி செய்யும்.

   அ. **வெளிசுவாசம்** *:* உங்கள் தவறை நீங்கள் உணர்ந்த அந்த நொடியே உங்கள் பாவத்தை தேவனிடம் அறிக்கையிடுங்கள் - நீங்கள் தவறு செய்துள்ளீர்கள் என்று தேவனிடம் ஒத்துக்கொள்ளுங்கள்; தேவன் உங்கள் பாவத்தை மன்னித்ததற்காக அவருக்கு நன்றி செலுத்துங்கள்; மேலும் மீண்டும் அந்த தவறை செய்யாதபடி மனம் திரும்புங்கள்.

   ஆ. **உள்சுவாசம் :** உங்கள் வாழ்க்கையை இயேசு கிறிஸ்து ஆள்வதற்கு, அவருடைய கட்டுப்பாட்டிற்கு உங்களை ஒப்படையுங்கள். அவருடைய பிரசன்னத்தாலும் வல்லமையாலும் உங்களை நிரப்பும்படி, விசுவாசத்தின் மூலம், பரிசுத்த ஆவியானவரை சார்ந்திருங்கள்.

4. பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்படுவதற்கு நீங்கள் செய்ய வேண்டியது என்ன?

அ. எபேசியர் 5:18-ஐ வாசிக்கவும். இந்த வசனம் கூறுகிற கட்டளை என்ன?

ஆ. 1 யோவான் 5:14-15 -ஐ வாசிக்கவும். நாம் எதையாகிலும் தேவனுடைய சித்தத்தின்படி கேட்கும்போது தேவன் நமக்கு என்ன வாக்குறுதி கொடுக்கிறார்?

5. நீங்கள் பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்பட விரும்பினால், என்னுடன் ஜெபியுங்கள். (அவர்களை ஜெபத்தில் வழிநடத்துவதற்கு "பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்படுவது எப்படி?" என்னும் கையேட்டில் உள்ள இந்த ஜெபத்தைப் பயன்படுத்துங்கள்)

"அன்பின் பிதாவே! நீர் எனக்குத் தேவை. நீர் ஆளுகை செய்ய வேண்டிய என் வாழ்க்கையை சுய இச்சைக்கு கீழ்ப்படிந்து உமக்கு விரோதமாக பாவம் செய்தேன் என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். இயேசு கிறிஸ்து எனக்காக சிலுவையில் மரித்ததன் மூலமாக என் பாவங்களை நீர் மன்னித்ததற்காக உமக்கு நன்றி செலுத்துகிறேன். என் வாழ்வின் சிங்காசனத்தில் நீர் மீண்டும் அமர்ந்து என்னை ஆளுகை செய்யும்படி என்னை அர்ப்பணிக்கிறேன். நீர் கட்டளையிட்டு இருக்கிற வண்ணமாகவும் நான் விசுவாசத்தோடு கேட்டால் கொடுப்பேன் என்று நீர் வாக்கு பண்ணியிருப்பதாலும் என்னை உம்முடைய பரிசுத்த ஆவியால் நிரப்பும்படி இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். என்னை பரிசுத்த ஆவியால் நிரப்பி என் வாழ்வை நீர் நடத்துகிறபடியால் உமக்கு நன்றி செலுத்துகிறேன்."

---

முன்னோக்கிப் பார்த்தல்

**நடைமுறைப்படுத்து:** இன்று நீங்கள் கற்றுக்கொண்ட விஷயங்களையும், அதை வாழ்வில் எப்படிப் பின்பற்றலாம் என்பதையும் பகிர்ந்து கொள்ளுங்கள்.

**பயிற்சி செய்து பழகு :** நீங்கள் இன்று கற்ற விஷயங்களை ஒரு கதையைப் போல ஒருவருக்கொருவர் சொல்லுங்கள்.

**பகிர்ந்துகொள்:** இந்த கதையை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள். சரியான சமயம் வரும்போது அவர்களை இந்த குழுவில் கலந்து கொள்ளும்படி அழைக்கவும்.

**ஜெபி:** நாம் கற்றுக்கொண்டவைகளுக்காகவும், குழுவில் உள்ளவர்களுக்காகவும், மேலும் நம் சமூகத்தில் நம்மைச் சுற்றி இருக்கும் மற்றவர்களுக்காகவும் ஜெபம் செய்யுங்கள்.

# பாடம் 6. சமாதானத்தைக் கண்டுகொள்ளுதல்

ஜெபத்தைக் குறித்து இந்தக் குறும்படப் பகுதி கற்றுக் கொடுக்கிறது.

பின்னோக்கிப் பார்த்தல்

**அக்கறை கொள்:** நீங்கள் எப்படி இருக்கிறீர்கள் என்பதைப் பகிர்ந்து கொள்ளுங்கள். கொடுப்பதற்கு உதாரத்துவமாய் இருங்கள்.

**ஆராதனை செய்:** பாடல் மற்றும் தேவன் உங்களுக்கு செய்த நன்மைகளை பகிர்ந்துகொள்ளுதல் மூலம் தேவனை ஆராதியுங்கள்.

**விசுவாசத்தைக் கொண்டாடு:** நீங்கள் கற்றுக்கொண்டதை வாழ்வில் எப்படிப் பயன்படுத்துகிறீர்கள் என்பதைப் பகிர்ந்து கொள்ளுங்கள்.

**தரிசனத்தைப் பகிர்ந்து கொள்:** கிறிஸ்துவுக்குள் நீங்கள் என்னவாக முடியும் என்றும் உங்கள் மூலம் தேவன் இந்த உலகத்தில் என்ன செய்ய முடியும் என்பதையும் பகிர்ந்து கொள்ளுங்கள்.

---

“நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங்குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள். அப்பொழுது, எல்லாப் புத்திக்கும்மேலான தேவசமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக்கொள்ளும்.“ (பிலிப்பியர் 4:6-7)

மேல் நோக்கிப் பார்த்தல்

**படத்தைக் காட்டு:** திரைப்படப் பகுதியைப் பார்க்கவும்.

**சொல்க :** பார்த்த திரைப்படப் பகுதியின் கதையை யாராவது ஒருவர் தன் சொந்த வார்த்தைகளில் சொல்லும்படி கேளுங்கள்.

**பூர்த்தி செய்க:** விடுபட்ட பகுதிகளை சொல்லும்படி குழுவில் உள்ள மற்றவர்களை உற்சாகப்படுத்தவும்.

**கலந்துரையாடு:** ஒவ்வொரு பாடத்திலும் கொடுக்கப்பட்டுள்ள கேள்விகளைக் கேட்கவும்.

1. இக்குறும்படப் பகுதியில் நிகழ்ந்தவற்றில் மிகவும் தனித்து நின்று உங்கள் கவனத்தை ஈர்த்த பகுதி எது?

2. அயூப் கைது செய்யப்பட்ட பிறகு இந்த பெண்கள் செய்த ஜெபம் என்ன? அவர்களின் ஜெபத்திற்குத் தேவன் எவ்வாறு பதில் கொடுத்தார்? இதைப் போன்றே தேவன் எப்பொழுதும் உடனே பதில் அளிப்பாரா?

3. லூக்கா 5:16, 6:12-13, மாற்கு 1:35-ஐ வாசிக்கவும். இயேசுவின் ஜெப வாழ்க்கையைப் பற்றி நாம் கற்றுக்கொள்வது என்ன?

4. பிலிப்பியர் 4:6-7, யாக்கோபு 5:13, 1 யோவான் 5:14-15-ஐ வாசிக்கவும். ஜெபத்தைக் குறித்து இந்த வசனங்கள் உங்களுக்கு கூறுவது என்ன?

முன்னோக்கிப் பார்த்தல்

**நடைமுறைப்படுத்து:** இன்று நீங்கள் கற்றுக்கொண்ட விஷயங்களையும், அதை வாழ்வில் எப்படிப் பின்பற்றலாம் என்பதையும் பகிர்ந்து கொள்ளுங்கள்.

**பயிற்சி செய்து பழகு :** நீங்கள் இன்று கற்ற விஷயங்களை ஒரு கதையைப் போல ஒருவருக்கொருவர் சொல்லுங்கள்.

**பகிர்ந்துகொள்:** இந்த கதையை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள். சரியான சமயம் வரும்போது அவர்களை இந்த குழுவில் கலந்து கொள்ளும்படி அழைக்கவும்.

**ஜெபி:** நாம் கற்றுக்கொண்டவைகளுக்காகவும், குழுவில் உள்ளவர்களுக்காகவும், மேலும் நம் சமூகத்தில் நம்மைச் சுற்றி இருக்கும் மற்றவர்களுக்காகவும் ஜெபம் செய்யுங்கள்.

# பாடம் 7. நண்பர்களும் எதிரிகளும்

நாம் எல்லா மக்களையும் நேசிக்க வேண்டும் என்பதை இந்தக் குறும்படப் பகுதி கற்பிக்கிறது.

பின்னோக்கிப் பார்த்தல்

**அக்கறை கொள்:** நீங்கள் எப்படி இருக்கிறீர்கள் என்பதைப் பகிர்ந்து கொள்ளுங்கள். கொடுப்பதற்கு உதாரத்துவமாய் இருங்கள்.

**ஆராதனை செய்:** பாடல் மற்றும் தேவன் உங்களுக்கு செய்த நன்மைகளை பகிர்ந்துகொள்ளுதல் மூலம் தேவனை ஆராதியுங்கள்.

**விசுவாசத்தைக் கொண்டாடு:** நீங்கள் கற்றுக்கொண்டதை வாழ்வில் எப்படிப் பயன்படுத்துகிறீர்கள் என்பதைப் பகிர்ந்து கொள்ளுங்கள்.

**தரிசனத்தைப் பகிர்ந்து கொள்:** கிறிஸ்துவுக்குள் நீங்கள் என்னவாக முடியும் என்றும் உங்கள் மூலம் தேவன் இந்த உலகத்தில் என்ன செய்ய முடியும் என்பதையும் பகிர்ந்து கொள்ளுங்கள்.

---

"ஆதலால், நீங்கள் பிரியமான பிள்ளைகளைப்போல தேவனைப் பின்பற்றுகிறவர்களாகி, கிறிஸ்து நமக்காகத் தம்மை தேவனுக்குச் சுகந்த வாசனையான காணிக்கையாகவும் பலியாகவும் ஒப்புக்கொடுத்து நம்மில் அன்புகூர்ந்ததுபோல, நீங்களும் அன்பிலே நடந்துகொள்ளுங்கள்." (எபேசியர் 5:1-2)

மேல் நோக்கிப் பார்த்தல்

**படத்தைக் காட்டு:** திரைப்படப் பகுதியைப் பார்க்கவும்.

**சொல்க :** பார்த்த திரைப்படப் பகுதியின் கதையை யாராவது ஒருவர் தன் சொந்த வார்த்தைகளில் சொல்லும்படி கேளுங்கள்.

**பூர்த்தி செய்க:** விடுபட்ட பகுதிகளை சொல்லும்படி குழுவில் உள்ள மற்றவர்களை உற்சாகப்படுத்தவும்.

**கலந்துரையாடு:** ஒவ்வொரு பாடத்திலும் கொடுக்கப்பட்டுள்ள கேள்விகளைக் கேட்கவும்.

1. சாரா, மரியம் மற்றும் மூசா யாரை வெறுக்கிறார்கள்? அவர்களை வெறுப்பதற்கான காரணம் என்ன?
2. இந்தக் குறும்படப் பகுதியில் அன்பை அடிப்படையாகக் கொண்ட சில உறவுகளும் இருந்தன. அவற்றை விவரிக்கவும்.
3. தன்னுடைய அன்பிற்கு பதிலாக கோபத்தை திருப்பித் தந்த ஹாரூனை நேசிப்பதற்கு ரிவ்காவிற்கு பலத்தைக் கொடுத்தது எது?
4. லூக்கா 6:27-36 -ஐ வாசிக்கவும். அன்பைக் குறித்து இயேசு நமக்கு கூறுவது என்ன?
5. கலாத்தியர் 5:16 -ஐ வாசிக்கவும். இயேசு சொல்வதைச் செய்வதற்கான வல்லமையை நாம் எவ்வாறு பெற்றுக்கொள்வது?

முன்னோக்கிப் பார்த்தல்

**நடைமுறைப்படுத்து:** இன்று நீங்கள் கற்றுக்கொண்ட விஷயங்களையும், அதை வாழ்வில் எப்படிப் பின்பற்றலாம் என்பதையும் பகிர்ந்து கொள்ளுங்கள்.

**பயிற்சி செய்து பழகு :** நீங்கள் இன்று கற்ற விஷயங்களை ஒரு கதையைப் போல ஒருவருக்கொருவர் சொல்லுங்கள்.

**பகிர்ந்துகொள்:** இந்த கதையை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள். சரியான சமயம் வரும்போது அவர்களை இந்த குழுவில் கலந்து கொள்ளும்படி அழைக்கவும்.

**ஜெபி:** நாம் கற்றுக்கொண்டவைகளுக்காகவும், குழுவில் உள்ளவர்களுக்காகவும், மேலும் நம் சமூகத்தில் நம்மைச் சுற்றி இருக்கும் மற்றவர்களுக்காகவும் ஜெபம் செய்யுங்கள்.

# பாடம் 8. விளக்கை சுத்தம் செய்தல்

தேவன் நம் ஒவ்வொருவரையும் மதிக்கிறார் என்பதை இந்தக் குறும்படப் பகுதி காட்டுகிறது.

பின்னோக்கிப் பார்த்தல்

**அக்கறை கொள்:** நீங்கள் எப்படி இருக்கிறீர்கள் என்பதைப் பகிர்ந்து கொள்ளுங்கள். கொடுப்பதற்கு உதாரத்துவமாய் இருங்கள்.

**ஆராதனை செய்:** பாடல் மற்றும் தேவன் உங்களுக்கு செய்த நன்மைகளை பகிர்ந்துகொள்ளுதல் மூலம் தேவனை ஆராதியுங்கள்.

**விசுவாசத்தைக் கொண்டாடு:** நீங்கள் கற்றுக்கொண்டதை வாழ்வில் எப்படிப் பயன்படுத்துகிறீர்கள் என்பதைப் பகிர்ந்து கொள்ளுங்கள்.

**தரிசனத்தைப் பகிர்ந்து கொள்:** கிறிஸ்துவுக்குள் நீங்கள் என்னவாக முடியும் என்றும் உங்கள் மூலம் தேவன் இந்த உலகத்தில் என்ன செய்ய முடியும் என்பதையும் பகிர்ந்து கொள்ளுங்கள்.

---

“இவ்விதமாக மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக்கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது.“ (மத்தேயு 5:16)

மேல் நோக்கிப் பார்த்தல்

**படத்தைக் காட்டு:** திரைப்படப் பகுதியைப் பார்க்கவும்.

**சொல்க :** பார்த்த திரைப்படப் பகுதியின் கதையை யாராவது ஒருவர் தன் சொந்த வார்த்தைகளில் சொல்லும்படி கேளுங்கள்.

**பூர்த்தி செய்க:** விடுபட்ட பகுதிகளை சொல்லும்படி குழுவில் உள்ள மற்றவர்களை உற்சாகப்படுத்தவும்.

**கலந்துரையாடு:** ஒவ்வொரு பாடத்திலும் கொடுக்கப்பட்டுள்ள கேள்விகளைக் கேட்கவும்.

1. யாக்கோபைத் திருமணம் செய்வதில் மரியமிற்கு ஏற்பட்ட கவலைகளும் பயங்களும் என்ன? ரிவ்கா மரியமிடம் அவற்றை எவ்வாறு கையாள வேண்டும் என்று கூறினாள்?
2. கலாத்தியர் 3:28 -ஐ வாசிக்கவும். ஆண்களையம் பெண்களையும் தேவன் எவ்வாறு பார்க்கிறார்?
3. மத்தேயு 5:16 -ஐ வாசிக்கவும். இயேசு  நம்முடைய நோக்கத்தை எவ்வாறு விவரிக்கிறார்?
4. ரோமர் 12:4-6, 1 கொரிந்தியர் 12:11-14 -ஐ வாசிக்கவும். நமக்கு வரங்களையும், தாலந்துகளையும் கொடுப்பது யார்?
5. உன்னிடத்திலுள்ள தனிப்பட்ட வரங்களும், தாலந்துகளும் என்ன? நீ அவற்றை எவ்வாறு பயன்படுத்துகிறாய்?

முன்னோக்கிப் பார்த்தல்

**நடைமுறைப்படுத்து:** இன்று நீங்கள் கற்றுக்கொண்ட விஷயங்களையும், அதை வாழ்வில் எப்படிப் பின்பற்றலாம் என்பதையும் பகிர்ந்து கொள்ளுங்கள்.

**பயிற்சி செய்து பழகு :** நீங்கள் இன்று கற்ற விஷயங்களை ஒரு கதையைப் போல ஒருவருக்கொருவர் சொல்லுங்கள்.

**பகிர்ந்துகொள்:** இந்த கதையை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள். சரியான சமயம் வரும்போது அவர்களை இந்த குழுவில் கலந்து கொள்ளும்படி அழைக்கவும்.

**ஜெபி:** நாம் கற்றுக்கொண்டவைகளுக்காகவும், குழுவில் உள்ளவர்களுக்காகவும், மேலும் நம் சமூகத்தில் நம்மைச் சுற்றி இருக்கும் மற்றவர்களுக்காகவும் ஜெபம் செய்யுங்கள்.

# பாடம் 9. திருமண நாள்

நாம் எந்த சூழ்நிலையிலும் திருப்தியாக இருக்க முடியும் என்பதை இக்குறும்படப் பகுதி கற்பிக்கிறது.

பின்னோக்கிப் பார்த்தல்

**அக்கறை கொள்:** நீங்கள் எப்படி இருக்கிறீர்கள் என்பதைப் பகிர்ந்து கொள்ளுங்கள். கொடுப்பதற்கு உதாரத்துவமாய் இருங்கள்.

**ஆராதனை செய்:** பாடல் மற்றும் தேவன் உங்களுக்கு செய்த நன்மைகளை பகிர்ந்துகொள்ளுதல் மூலம் தேவனை ஆராதியுங்கள்.

**விசுவாசத்தைக் கொண்டாடு:** நீங்கள் கற்றுக்கொண்டதை வாழ்வில் எப்படிப் பயன்படுத்துகிறீர்கள் என்பதைப் பகிர்ந்து கொள்ளுங்கள்.

**தரிசனத்தைப் பகிர்ந்து கொள்:** கிறிஸ்துவுக்குள் நீங்கள் என்னவாக முடியும் என்றும் உங்கள் மூலம் தேவன் இந்த உலகத்தில் என்ன செய்ய முடியும் என்பதையும் பகிர்ந்து கொள்ளுங்கள்.

---

"தாழ்ந்திருக்கவும் எனக்குத் தெரியும், வாழ்ந்திருக்கவும் எனக்குத் தெரியும்; எவ்விடத்திலும் எல்லாவற்றிலும் திருப்தியாயிருக்கவும் பட்டினியாயிருக்கவும், பரிபூரணமடையவும் குறைவுபடவும் போதிக்கப்பட்டேன். என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ்செய்ய எனக்குப் பெலனுண்டு." (பிலிப்பியர் 4:12-13)

மேல் நோக்கிப் பார்த்தல்

**படத்தைக் காட்டு:** திரைப்படப் பகுதியைப் பார்க்கவும்.

**சொல்க :** பார்த்த திரைப்படப் பகுதியின் கதையை யாராவது ஒருவர் தன் சொந்த வார்த்தைகளில் சொல்லும்படி கேளுங்கள்.

**பூர்த்தி செய்க:** விடுபட்ட பகுதிகளை சொல்லும்படி குழுவில் உள்ள மற்றவர்களை உற்சாகப்படுத்தவும்.

**கலந்துரையாடு:** ஒவ்வொரு பாடத்திலும் கொடுக்கப்பட்டுள்ள கேள்விகளைக் கேட்கவும்.

1. லூக்கா 10:38-42-ல் இடம் பெற்றுள்ள மார்த்தாள் மரியாளைப் பற்றிய ஒரு சம்பவத்தை சாரா பகிர்ந்துகொண்டாள். உங்களில் யார் இக்கதையை உங்கள் சொந்த வார்த்தைகளில் சொல்ல விரும்புகிறீர்கள்?

2. தேவனோடு சேர்ந்து நடப்பதை உங்கள் வாழ்க்கையில் மிகவும் முதன்மையானதாக கொள்வதற்கு நீங்கள் என்ன செய்யலாம்?

3. இத்திருமண ஏற்பாடுகளின் போது திருமணமாகாத டாலியா எவ்வாறு உணர்ந்திருப்பாள் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?

4. 1 கொரிந்தியர் 7:6-8 -ஐ வாசிக்கவும். திருமணம் செய்து கொள்வது, திருமணமின்றி தனிமையில் இருப்பது இவை இரண்டுமே தேவனால் அருளப்பட்ட வரங்கள் என்று பவுல் கூறியுள்ளார். நம்முடைய கலாச்சாரம் இதைக்குறித்து என்ன கூறுகிறது? வேத வசனம் கூறுவதில் இருந்து இது எவ்வாறு வேறுபட்டுள்ளது?

5. பிலிப்பியர் 4:12-13 மற்றும் 19-20 -ஐ வாசிக்கவும். எல்லாச் சூழலிலும் மனநிறைவாய் இருப்பதற்கான இரகசியம் என்ன என்று பவுல் கூறுகிறார்?

முன்னோக்கிப் பார்த்தல்

**நடைமுறைப்படுத்து:** இன்று நீங்கள் கற்றுக்கொண்ட விஷயங்களையும், அதை வாழ்வில் எப்படிப் பின்பற்றலாம்  என்பதையும் பகிர்ந்து கொள்ளுங்கள்.

**பயிற்சி செய்து பழகு :** நீங்கள் இன்று கற்ற விஷயங்களை ஒரு கதையைப் போல ஒருவருக்கொருவர் சொல்லுங்கள்.

**பகிர்ந்துகொள்:** இந்த கதையை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள். சரியான சமயம் வரும்போது அவர்களை இந்த குழுவில் கலந்து கொள்ளும்படி அழைக்கவும்.

**ஜெபி:** நாம் கற்றுக்கொண்டவைகளுக்காகவும்,  குழுவில் உள்ளவர்களுக்காகவும், மேலும் நம் சமூகத்தில் நம்மைச் சுற்றி இருக்கும்  மற்றவர்களுக்காகவும் ஜெபம் செய்யுங்கள்.

# பாடம் 10. பாதியில் விடப்பட்ட தையல்

ம ன் னி ப் பை ப் ப ற் றி இ க் கு று ம் ப ட ப் ப கு தி க ற் பி க் கி ற து .

பின்னோக்கிப் பார்த்தல்

**அக்கறை கொள்:** நீங்கள் எப்படி இருக்கிறீர்கள் என்பதைப் பகிர்ந்து கொள்ளுங்கள். கொடுப்பதற்கு உதாரத்துவமாய் இருங்கள்.

**ஆராதனை செய்:** பாடல் மற்றும் தேவன் உங்களுக்கு செய்த நன்மைகளை பகிர்ந்துகொள்ளுதல் மூலம் தேவனை ஆராதியுங்கள்.

**விசுவாசத்தைக் கொண்டாடு:** நீங்கள் கற்றுக்கொண்டதை வாழ்வில் எப்படிப் பயன்படுத்துகிறீர்கள் என்பதைப் பகிர்ந்து கொள்ளுங்கள்.

**தரிசனத்தைப் பகிர்ந்து கொள்:** கிறிஸ்துவுக்குள் நீங்கள் என்னவாக முடியும் என்றும் உங்கள் மூலம் தேவன் இந்த உலகத்தில் என்ன செய்ய முடியும் என்பதையும் பகிர்ந்து கொள்ளுங்கள்.

---

“ஆகையால், நீங்கள் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட பரிசுத்தரும் பிரியருமாய், உருக்கமான இரக்கத்தையும், தயவையும், மனத்தாழ்மையையும், சாந்தத்தையும், நீடிய பொறுமையையும் தரித்துக்கொண்டு; ஒருவரையொருவர் தாங்கி, ஒருவர்பேரில் ஒருவருக்குக் குறைபாடு உண்டானால், கிறிஸ்து உங்களுக்கு மன்னித்ததுபோல, ஒருவருக்கொருவர் மன்னியுங்கள். இவை எல்லாவற்றின்மேலும், பூரணசற்குணத்தின் கட்டாகிய அன்பைத் தரித்துக்கொள்ளுங்கள்.“ (கொலோசெயர் 3:12-14)

மேல் நோக்கிப் பார்த்தல்

**படத்தைக் காட்டு:** திரைப்படப் பகுதியைப் பார்க்கவும்.

**சொல்க :** பார்த்த திரைப்படப் பகுதியின் கதையை யாராவது ஒருவர் தன் சொந்த வார்த்தைகளில் சொல்லும்படி கேளுங்கள்.

**பூர்த்தி செய்க:** விடுபட்ட பகுதிகளை சொல்லும்படி குழுவில் உள்ள மற்றவர்களை உற்சாகப்படுத்தவும்.

**கலந்துரையாடு:** ஒவ்வொரு பாடத்திலும் கொடுக்கப்பட்டுள்ள கேள்விகளைக் கேட்கவும்.

1. ஆரம்பத்தில் ஒரு சிறு விரிசலை உருவாக்கி, பின்னர் அதைக் கொஞ்சம் கொஞ்சமாக பெரிதாக்குகிற ஒரு "விடுபட்ட தையலைப்" போன்று எவ்வாறு கோபமும், கசப்புணர்வும் உள்ளது?

2. ரிவ்காவை சபித்து மிக மோசமாக நடத்தியவர் மூசா. பின்பு ஏன் ரிவ்கா அவரிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும்? அதன் முக்கியத்துவம் என்ன?

3. லூக்கா 6:27-28, கொலோசெயர் 3:12-14, ரோமர் 12:14-19 -இவ்வசனங்களை வாசிக்கவும். நம்மைக் காயப்படுத்தியர்களுடன் நாம் எப்படி பழக வேண்டும்? அவர்களுக்கும் நமக்குமான தொடர்பு எப்படி இருக்க வேண்டும் என்று தேவன் கூறுகிறார்?

4. உங்கள் வாழ்க்கையில் ஏதேனும் விடுபட்டதையல்கள் உள்ளதா? யார்மேல் உங்களுக்கு கோபமும் கசப்பும் உள்ளது? நீங்கள் யாரிடமாவது மன்னிப்பு கேட்க வேண்டியுள்ளதா? அவர்களை மன்னிக்க நீங்கள் என்னென்ன முயற்சிகளை எடுக்கலாம்?

முன்னோக்கிப் பார்த்தல்

**நடைமுறைப்படுத்து:** இன்று நீங்கள் கற்றுக்கொண்ட விஷயங்களையும், அதை வாழ்வில் எப்படிப் பின்பற்றலாம்  என்பதையும் பகிர்ந்து கொள்ளுங்கள்.

**பயிற்சி செய்து பழகு :** நீங்கள் இன்று கற்ற விஷயங்களை ஒரு கதையைப் போல ஒருவருக்கொருவர் சொல்லுங்கள்.

**பகிர்ந்துகொள்:** இந்த கதையை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள். சரியான சமயம் வரும்போது அவர்களை இந்த குழுவில் கலந்து கொள்ளும்படி அழைக்கவும்.

**ஜெபி:** நாம் கற்றுக்கொண்டவைகளுக்காகவும்,  குழுவில் உள்ளவர்களுக்காகவும், மேலும் நம் சமூகத்தில் நம்மைச் சுற்றி இருக்கும்  மற்றவர்களுக்காகவும் ஜெபம் செய்யுங்கள்.

# பாடம் 11. பிறப்புகள்

இக்குறும்படப் பகுதி பாடுகள் மற்றும் துன்பங்களை அனுபவித்தல் மீது கவனம் செலுத்துகிறது.

பின்னோக்கிப் பார்த்தல்

**அக்கறை கொள்:** நீங்கள் எப்படி இருக்கிறீர்கள் என்பதைப் பகிர்ந்து கொள்ளுங்கள். கொடுப்பதற்கு உதாரத்துவமாய் இருங்கள்.

**ஆராதனை செய்:** பாடல் மற்றும் தேவன் உங்களுக்கு செய்த நன்மைகளை பகிர்ந்துகொள்ளுதல் மூலம் தேவனை ஆராதியுங்கள்.

**விசுவாசத்தைக் கொண்டாடு:** நீங்கள் கற்றுக்கொண்டதை வாழ்வில் எப்படிப் பயன்படுத்துகிறீர்கள் என்பதைப் பகிர்ந்து கொள்ளுங்கள்.

**தரிசனத்தைப் பகிர்ந்து கொள்:** கிறிஸ்துவுக்குள் நீங்கள் என்னவாக முடியும் என்றும் உங்கள் மூலம் தேவன் இந்த உலகத்தில் என்ன செய்ய முடியும் என்பதையும் பகிர்ந்து கொள்ளுங்கள்.

---

“பிரியமானவர்களே, உங்களைச் சோதிக்கும்படி உங்கள் நடுவில் பற்றியெரிகிற அக்கினியைக்குறித்து ஏதோ புதுமையென்று திகையாமல், கிறிஸ்துவின் மகிமை வெளிப்படும்போதுநீங்கள் களிகூர்ந்து மகிழும்படியாக அவருடைய பாடுகளுக்கு நீங்கள் பங்காளிகளானதால் சந்தோஷப்படுங்கள்.“ (1 பேதுரு 4:12-13)

மேல் நோக்கிப் பார்த்தல்

**படத்தைக் காட்டு:** திரைப்படப் பகுதியைப் பார்க்கவும்.

**சொல்க :** பார்த்த திரைப்படப் பகுதியின் கதையை யாராவது ஒருவர் தன் சொந்த வார்த்தைகளில் சொல்லும்படி கேளுங்கள்.

**பூர்த்தி செய்க:** விடுபட்ட பகுதிகளை சொல்லும்படி குழுவில் உள்ள மற்றவர்களை உற்சாகப்படுத்தவும்.

**கலந்துரையாடு:** ஒவ்வொரு பாடத்திலும் கொடுக்கப்பட்டுள்ள கேள்விகளைக் கேட்கவும்.

1. சிறையில் இருந்தபொழுது தாவூத்திற்கு என்ன நிகழ்ந்தது?
2. தாவூத்தின் சாட்சியைக் கேட்ட மூசாவும் டாலியாவும் ஏன் வித்தியாசமாக நடந்து கொண்டார்கள்?
3. தனக்கும் இயேசுவுக்கும் இடையே ஏற்பட்ட புதிய உறவைக் குறித்துப் பிறரிடம் சொல்ல விரும்புவதாகத் தாவூத் கூறினான். தன்னுடைய குடும்பம் அல்லது மற்றவர்கள் இந்த செய்தியைக் கேட்கும்பொழுது என்ன சொல்வார்கள், எப்படி நடந்துகொள்வார்கள் என்று அவர் பயப்படவில்லை. இந்த செய்தியை தன் குடும்பத்தினரிடமும் நண்பர்களிடமும் எவ்வாறு எப்பொழுது பகிர்ந்து கொள்ள வேண்டும் என்பதைக் குறித்து தாவூத்துக்கு உன் அறிவுரை என்ன?
4. கொலோசெயர் 4:2-6 -ஐ வாசிக்கவும்.

   அ. நாம் ஒருவருக்காக ஒருவர் எவ்வாறு ஜெபிக்க வேண்டும் என்பதைக் குறித்து இப்பகுதி கூறுவது என்ன?

   ஆ. இயேசுவை இன்னும் தெய்வமாக விசுவாசிக்காதவர்களுக்கு முன்பாக நீங்கள் எவ்வாறு ஞானமாய் நடக்க வேண்டும் என்று நினைக்கிறீர்கள்? “கிருபை பொருந்தின, உப்பால் சாரமேறின"  வார்த்தைகளுள்ள ஒரு உரையாடல் எவ்வாறு இருக்கும்?
5. 1 பேதுரு 4:12-14, 16 -ஐ வாசிக்கவும். நாம் கிறிஸ்துவின் நிமித்தம் துன்புறுத்தலைச் சந்திக்கும்போது அதனை எவ்வாறு எதிர்கொள்ள வேண்டும்?

முன்னோக்கிப் பார்த்தல்

**நடைமுறைப்படுத்து:** இன்று நீங்கள் கற்றுக்கொண்ட விஷயங்களையும், அதை வாழ்வில் எப்படிப் பின்பற்றலாம்  என்பதையும் பகிர்ந்து கொள்ளுங்கள்.

**பயிற்சி செய்து பழகு :** நீங்கள் இன்று கற்ற விஷயங்களை ஒரு கதையைப் போல ஒருவருக்கொருவர் சொல்லுங்கள்.

**பகிர்ந்துகொள்:** இந்த கதையை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள். சரியான சமயம் வரும்போது அவர்களை இந்த குழுவில் கலந்து கொள்ளும்படி அழைக்கவும்.

**ஜெபி:** நாம் கற்றுக்கொண்டவைகளுக்காகவும்,  குழுவில் உள்ளவர்களுக்காகவும், மேலும் நம் சமூகத்தில் நம்மைச் சுற்றி இருக்கும்  மற்றவர்களுக்காகவும் ஜெபம் செய்யுங்கள்.

# பாடம் 12. சுவிசேஷத்தை அறிவித்தல்

இயேசுவை நாம் எப்படி விசுவாசித்து தெய்வமாக ஏற்றுக்கொண்டோம் என்ற நம் சொந்த அனுபவத்தை மற்றவர்களுக்குச் எப்படி சொல்ல வேண்டும் என்று இக்குறும்படப் பகுதி நமக்குக் கற்றுக்கொடுக்கிறது.

பின்னோக்கிப் பார்த்தல்

**அக்கறை கொள்:** நீங்கள் எப்படி இருக்கிறீர்கள் என்பதைப் பகிர்ந்து கொள்ளுங்கள். கொடுப்பதற்கு உதாரத்துவமாய் இருங்கள்.

**ஆராதனை செய்:** பாடல் மற்றும் தேவன் உங்களுக்கு செய்த நன்மைகளை பகிர்ந்துகொள்ளுதல் மூலம் தேவனை ஆராதியுங்கள்.

**விசுவாசத்தைக் கொண்டாடு:** நீங்கள் கற்றுக்கொண்டதை வாழ்வில் எப்படிப் பயன்படுத்துகிறீர்கள் என்பதைப் பகிர்ந்து கொள்ளுங்கள்.

**தரிசனத்தைப் பகிர்ந்து கொள்:** கிறிஸ்துவுக்குள் நீங்கள் என்னவாக முடியும் என்றும் உங்கள் மூலம் தேவன் இந்த உலகத்தில் என்ன செய்ய முடியும் என்பதையும் பகிர்ந்து கொள்ளுங்கள்.

---

“ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி,
பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து,
நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி
அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள்; இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார். ஆமென்.“ (மத்தேயு 28:19-20)

மேல் நோக்கிப் பார்த்தல்

**படத்தைக் காட்டு:** திரைப்படப் பகுதியைப் பார்க்கவும்.

**சொல்க :** பார்த்த திரைப்படப் பகுதியின் கதையை யாராவது ஒருவர் தன் சொந்த வார்த்தைகளில் சொல்லும்படி கேளுங்கள்.

**பூர்த்தி செய்க:** விடுபட்ட பகுதிகளை சொல்லும்படி குழுவில் உள்ள மற்றவர்களை உற்சாகப்படுத்தவும்.

**கலந்துரையாடு:** ஒவ்வொரு பாடத்திலும் கொடுக்கப்பட்டுள்ள கேள்விகளைக் கேட்கவும்.

1. நம்முடைய இரட்சிப்பின் அனுபவத்தை எவ்வாறு பகிர்ந்துகொள்வது என்பதற்கு தாவூத் ஒரு சிறந்த சான்றாக இருக்கிறான்.

    அ. அவன் இயேசுவை கிறிஸ்துவை சந்திப்பதற்கு முன்பு அவனுடைய வாழ்க்கை எப்படி இருந்தது?

    ஆ. அவன் இயேசு கிறிஸ்துவை எவ்வாறு சந்தித்தான்?

    இ. தாவூத் தன் வாழ்க்கையில் இயேசு கிறிஸ்துவை தன் சொந்த ஆண்டவராக ஏற்றுக்கொண்ட பின்னர் அவனுடைய வாழ்க்கை எவ்வாறு மாறியது?

2. மத்தேயு 28:19-20 -ஐ வாசிக்கவும்.

    அ. நாம் என்ன செய்ய வேண்டும் என இயேசு நமக்கு கட்டளையிட்டுள்ளார்?

    ஆ. அவர் நமக்கு என்ன வாக்குறுதி அளித்துள்ளார்?

3. தன்னுடைய கவலைகள் என்று டாலியா, மரியமிடம் கூறியவை எவை? மரியம் டாலியாவிற்கு எவ்வாறு பதிலளித்தாள்?

4. உங்களுடைய இரட்சிப்பின் அனுபவக் கதையை மற்றவர்களிடம் கூறுவதற்கு இந்த கேள்விகளுக்குப் பதிலளியுங்கள்.

    அ. நீங்கள் இயேசு கிறிஸ்துவை சந்திக்கும் முன் உங்கள் வாழ்க்கை எப்படி இருந்தது?

    ஆ. நீங்கள் இயேசு கிறிஸ்துவை எப்பொழுது, எவ்வாறு சந்தித்தீர்கள்?

    இ. நீங்கள் இயேசு கிறிஸ்துவை சந்தித்ததிலிருந்து உங்கள் வாழ்க்கை எவ்வாறு மாறியுள்ளது?

5. உங்கள் வாழ்க்கையுடன் தொடர்புடையவர்களில் இயேசு கிறிஸ்துவை அறியாதவர்கள் யார்? உங்கள் கதையையும், இயேசுவைப் பற்றிய நற்செய்தியையும் அவர்களுடன் பகிர்ந்துகொள்ள தேவன் உங்களுக்கு வாய்ப்பளிக்கும்படி தேவனிடம் கேளுங்கள்.

---

முன்னோக்கிப் பார்த்தல்

**நடைமுறைப்படுத்து:** இன்று நீங்கள் கற்றுக்கொண்ட விஷயங்களையும், அதை வாழ்வில் எப்படிப் பின்பற்றலாம் என்பதையும் பகிர்ந்து கொள்ளுங்கள்.

**பயிற்சி செய்து பழகு :** உங்கள் இரட்சிப்பின் அனுபவ கதையை இப்பொழுதே உங்கள் குழுவில் உள்ள ஒரு பெண்ணிடம் சொல்லிப் பார்த்து பயிற்சி எடுங்கள்.

**பகிர்ந்துகொள்:** இந்த கதையை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள். சரியான சமயம் வரும்போது அவர்களை இந்த குழுவில் கலந்து கொள்ளும்படி அழைக்கவும்.

**ஜெபி:** நாம் கற்றுக்கொண்டவைகளுக்காகவும், குழுவில் உள்ளவர்களுக்காகவும், மேலும் நம் சமூகத்தில் நம்மைச் சுற்றி இருக்கும் மற்றவர்களுக்காகவும் ஜெபம் செய்யுங்கள்.

# படி நான்கு 04

## அடுத்த படியை எடுத்து வை!

உங்கள் குழு ரிவ்கா பாடத்திட்டத்திற்கான முதல் மூன்று படிகளை முடித்ததற்கு வாழ்த்துகள்! இப்போது நான்காவது படியாகிய அடுத்த படியை எடுக்க வேண்டிய நேரம் இது. நீங்கள் கற்ற கடைசிப் பாடம் இயேசுகிறிஸ்துவின் நற்செய்தியை மற்றவர்களிடம் பகிர்வது. **உங்கள் குழுவின் சில உறுப்பினர்கள் தங்கள் சொந்த குழுவைத் தொடங்க நீங்கள் சவால் விடுவதற்கு இது ஒரு சிறந்த வாய்ப்பாக இருக்கலாம்.** உங்கள் குழு தொடர்ந்து ஒன்றாகச் சந்திக்க விரும்பினால், "இயேசுவை நினை!" அல்லது "இயேசுவை அறிந்துகொள்!" போன்ற புதிய குழு ஆய்வுக்கு மாறுமாறு பரிந்துரைக்கிறோம். இந்த ஆய்வுகள் பற்றிய கூடுதல் தகவல்களை கீழே காணலாம்

"இயேசுவை நினை!" பாடத்திட்டத்தைப் பற்றிய தகவல் பக்கம்:
www.jesusfilm.org/consider-jesus/

"இயேசுவை அறிந்துகொள்!" பாடத்திட்டத்தைப் பற்றிய தகவல் பக்கம்:
www.jesusfilm.org/partners/resources/strategies/knowing-jesus/

"இயேசுவை அறிந்துகொள்!" பாடத்திட்டத்திற்கான விளம்பர காணொளி:
www.youtube.com/watch?v=MkYpNK5OvKk

இயேசுவை நினை

இயேசுவை அறிந்துகொள்

இயேசுவை அறிந்துகொள் விளம்பரம்

# ரிவ்கா

## அடுத்த தலைமுறைக்கான பாடங்கள்